# ஆவணங்களில் இராமர் பாலம்


**த. ஆதித்தன்**


இணைப்பேராசிரியர், அரிய கையெழுத்துச் சுவடித்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர், தமிழ்நாடு, இந்தியா

---

இந்தியாவின் இராமேஸ்வரத்திற்கும் இலங்கையின் தலைமன்னார்க்கும் இடையே அமைந்துள்ள பாலமே இராமர் பாலம். முப்பது கிலோமீட்டர் நீளமுள்ள இப்பாலம் இயற்கையாக அமைந்தது என்றும், தொன்மையான காலம் தொட்டு கிடைக்கப் பெறும் இலக்கியச் சான்றுகளாலும், கல்வெட்டுச் சான்றுகளாலும் இப்பாலம் கட்டப்பட்டதுதான் என்றும் கூறுகின்றனர். நள பந்தனம், ராமசேது, இராமர்பாலம், ஆதாம் பாலம் என பல பெயர்களால் வழங்கப்படும் இப்பாலம் குறித்து ஆவணங்களில் இடம்பெற்றுள்ள தகவல்களை எடுத்துரைப்பதாக இக் கட்டுரை அமைகின்றது.


ஐரோப்பியர்கள் இராமர் பாலத்தை ஆதாம் பாலம் (Adam's Bridge) என்று அழைக்கிறார்கள். இலங்கையில் இருந்து இப்பாலம் வழியாக ஆதாம் சென்றதாகக் குறிப்பிடப்படும் ஒரு அராபியத் தொன்மக் கதையை அடிப்படையாகக் கொண்டு இப்பெயரிட்டு அழைப்பதும் புலனாகின்றது.





நமது அரசால் 1972 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தமிழ்நாடு விவரக் கையேட்டில் ஆதாம் பாலம் (Adam's Bridge) என்று குறிப்பிடப்பட்டுள்ளதோடு இராமயணக் கதை தொடர்புடையது என்ற தகவலும், அமைவிடமும் தெளிவாக்கப்பட்டுள்ளது.

கி.பி.1868-இல் ஆங்கிலேய அரசாட்சியின் போது மதுரா கையேடு (Madura Manual) என்ற பெயரில் வெளியிடப்பட்ட விவரக்குறிப்பேட்டிலும் ஆதாம் பாலம் குறித்துக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் பாலத்தின் அமைவிடம், தன்மை, நீள அகலம் போன்ற தகவல்களும் அதில் இடம்பெற்றுள்ளன.




சென்னை மாகாண விவரக்குறிப்பேடு ஒன்று கி.பி.1885 ஆம் ஆண்டு ஆங்கிலேய அரசால் வெளியிடப்பட்டுள்ளது. அதில் கி.பி.1480இல் இராமர் பாலம் வழியாக இராமேஸ்வரத்திற்கும் இலங்கைக்கும் இடையே தரைவழித் தொடர்பு இருந்ததாகப் பதிவு ஒன்று இடம் பெற்றுள்ளது. இச்சான்றுகள் அரிய தாள் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டவைகளாகும்.

இதேபோன்று கல்வெட்டுச் சான்றுகளும் இராமர் பாலம் குறித்துப் பதிவு செய்துள்ளன. சகாயராஜ் என்பார் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் கல்வெட்டுத்துறையில் பேராசிரியர் முனைவர் பா. ஜெயக்குமார் அவர்களின் நெறியாளுகையின் கீழ் ஆய்வு மாணவராக இருந்த போது தமது

 ISSN NO.2581-5938
 மலர்-2, இதழ்-1, சனவரி 2019

ஆய்விற்காகத் தேவிப்பட்டினம் ஊரில் உள்ள கல்வெட்டு ஒன்றினைப் படியெடுத்துள்ளார். அதில் சேது மூலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பதினான்காம் நூற்றாண்டைச் சார்ந்த இக்கல்வெட்டு, இராமர் பாலம் குறித்த செய்தியைப் பதிவு செய்துள்ளதை அறிந்துகொள்ளமுடிகிறது.



அரசர் சடையவர்மன் விக்ரமபாண்டியன் கல்வெட்டு கி.பி.1348ஆம் ஆண்டு

கி.பி.1947இல் நெதர்லாந்தில் தயாரிக்கப்பட்ட இந்திய வரைபடம் உள்ளிட்ட பதினெட்டாம் நூற்றாண்டைச் சார்ந்த பல வரைபடங்களில் இராமர் பாலம் குறிக்கப் பெற்றுள்ளது.

டி.குப்புராமு அவர்கள் “அலெக்சாண்டர் ஹேமில்ட்டன் ‘ஏ நியூ அக்கவுண்ட் ஆப் த ஈஸ்ட் இண்டீஸ்’ என்ற புத்தகத்தை கி.பி.1744 இல் எழுதினார். இதில் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையே இப்பாலம் வழியாகப் போக்குவரத்து நடைபெற்று வந்துள்ளது என்பதைக் குறிப்பிட்டுள்ளார். இவற்றின் அடிப்படையில் சுவாட்ஸ் பெர்க் தயாரித்த வரைபடத்தை சிகாகோ பல்கலைக்கழகம் வெளியிட்டது. இதில் சுமார் 100 வரைபடங்களில் இந்தப் பாலம் இடம் பெற்றுள்ளது. இந்தப் பதிவுகள் கி.பி.12ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி.17ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டவை ஆகும்.

1788இல் ஜோசப் பார்க்ஸ் என்ற தாவரவியல் வல்லுநர் இந்தப் பாலம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த இவர் பாலத்தை, ராமசேது என்றே குறிப்பிட்டுள்ளார். ஆனால் கி.பி.1804இல் தயாரிக்கப்பட்ட இந்திய நிலவியல் வரைபடத்தில் இது ஆதாம் பாலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் கண்டெடுக்கப்பட்ட ஆயிரக்கணக்கான தங்க, வெள்ளி மற்றும் வெண்கல நாணயங்களில் ராமசேது பொறிக்கப்பட்டுள்ளது. இவை கி.பி.12 மற்றும் கி.பி.15ஆம் நூற்றாண்டிற்கு இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்தவை.” என்கிறார். (டி. குப்புராமு, ராமசேது, ராமேஸ்வரம் ராமசேது பாதுகாப்பு இயக்கம், பக்கம் 23,) இதன் மூலமும் மேற்கண்ட ஆவணங்கள் மூலமும் இராமர் பாலம் இருந்துள்ளது என்கிற கூற்று வலுப்பெறுவதை அறியமுடிகின்றது.

ஆவணங்கள் நமது தொன்மையான வரலாற்றினை ஆராய்வதற்குரிய முதன்மைத் தரவுகளாகும். இச்சான்றாதாரங்களை மேலும் நுணுகி ஆராயும்பொழுது இராமர் பாலம் குறித்த புதிய வரைவுகள் கிடைக்கவும் வாய்ப்புள்ளன.

## RAMAR BRIDGE : A HISTORICAL OVERVIEW

**T. Athithan**

Rama's Bridge is a chain of limestone shoals, between Pamban Island, (Rameswaram Island,) off the south-eastern coast of Tamil Nadu, India, and Mannar Island, off the north-western coast of Sri Lanka. Geological evidences and culverts suggest that this bridge is a former land connection between India and Sri Lanka. The bridge is 30 km long and separates the Gulf of Mannar (south-west) from the Palk Strait (northeast). Euopeans call it as Adam’s Bridge and it was also mentioned in Tamilnadu Gazette in 1972 with reference to Ramayana story. The same reference was acknowledged by the British and was recorded in a book called “The Madura State : A Manual (1868)”. In 1885, in “The Manual of Madras Presidency” also acknowledges it existence and It was reportedly passable on foot up to the 15th century. Some of the regions are dry and the sea in the area rarely exceeds 1 metre (3 ft) in depth, thus hindering navigational opportunities: temple records seem to say that Adam's Bridge was completely above sea level until it broke in a cyclone in 1480. Mr.Shagayaraj, research scholar under the guidance of Dr.P.Jayakumar has taken a photocopy of a culvert in

Devipattinam in which references about the bridge was found with the name Sethumoolam which was built in 14th century. T.kuppuramu in his book "Alexander Hamilton : A New Account of the East Indies" (1744) mentioned that the bridge was used between India and Srilanka . Swatzberg also documented the bridge in his maps during 12th to 17th centuries and the Chicago University also published it. Joseph Parx, an Austarlian botanist had also recorded the bridge with the name 'Rama Sethu". The 1804 map of India also mentioned the bridge as Adam's Bridge. The image of the bridge can be found in thousands of gold, silver and copper coins recovered in Srilanka. Deeper investigations may reveal more supportive evidences about the Ramar Bridge.